**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 46 of 2024

DATE : 05.08.2025

Depositions of witness for Prosecution

PW : 3

| | | | |
|---|---|---|---|
| Name | வைரமுத்து | Caste | |
| Father/Husband's Name | மாரிமுத்து | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of August 2025

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : –**

1) நான் அக்கனாபுரத்தில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். கடந்த 14.12.2022 அன்று காலை 07.15 மணிக்கு அக்கனாபுரம் காலனி விலக்கு வழியாக சென்றபோது போலீஸார்கள் சம்பவ இடத்தை பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். போலீசார்கள் தயார் செய்த பார்வை மகசரில் நானும் மாரியப்பன் என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரின் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

எனக்கு எழுதப் படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் சம்பவ இடம் என்று சொல்லி உள்ளது எந்த வழக்கு சம்பவம் என்று எனக்கு தெரியுமா என்றால் விபத்து வழக்கு சம்பந்தம் சம்பந்தமாக. வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன

எழுதி இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை : –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு